**செ.வெ.எண்: 61** **நாள்: 27.10.2016**

# புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் ரூ.7326774 மதிப்பில் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டம், புனல்குளம் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற உறுப்பினர் திரு.ப.குமார்அவர்கள் முன்னிலையில் 795 பயனாளிகளுக்கு ரூ.7326774/- மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கப்பட்டது.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:

தமிழக அரசு பொதுமக்களிடமிருந்து குறைகளை மனுக்களாக பெற்று தீர்வுகாணும் நோக்கத்தில் மாதந்தோறும் ஒரு கிராமத்தை தேர்வு செய்து மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட நிர்வாகம் சார்பில் நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் கந்தர்வகோட்டை வட்டம், புனல்குளம் கிராமத்தில் இன்று (27.10.2016) மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 112 மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், இம்முகாமிற்காக பெறப்பட்ட 291 முன் மனுக்களில், 246 மனுக்கள் ஏற்கப்பட்டும், 44 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டும்,1மனு நிலுவையில் உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6வது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்த அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் வரை இலவச மின்சாரம், திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் திருமாங்கல்யத்திற்கு வழங்கப்பட்ட தங்கம் 4 கிராமிலிருந்து 8 கிராமாக உயர்வு, சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள விவசாயக்கடன் தள்ளுபடி, கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 200 யூனிட்களாகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 750 யூனிட்களாகவும் உயர்வு உள்ளிட்ட 5 முக்கிய திட்டங்களை கையொப்பமிட்டு உடனடியாக நிறைவேற்றி உள்ளார்கள். மேலும் தமிழகஅரசு அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இப்பகுதி பொதுமக்களின் கோரிக்கையான பேருந்து வசதி, சாலை வசதி, குடிநீர் வசதி, முதியோர் உதவித்தொகை போன்ற பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் இம்முகாமில் வருவாய்த்துறையின் சார்பில் 193 பயனாளிகளுக்கு ரூ.5268500/- மதிப்பில் விலையில்லா வீட்டு மனைப்பட்டாக்களும், 23 பயனாளிகளுக்கு ரூ.23000 மதிப்பில் முதியோர் உதவித்தொகைக்கான காசோலைகளும், 14 பயனாளிகளுக்கு ரூ.175000 மதிப்பில் இறப்பு நிவாரண உதவித்தொகைக்கான காசோலைகளும், 13 பயனாளிகளுக்கு ரூ.13000 மதிப்பில் விதவை உதவித்தொகைக்கான காசோலைகளும், 15 பயனாளிகளுக்கு ரூ.128000 மதிப்பில் திருமண உதவித்தொகைக்கான காசோலையும், 22 பயனாளிகளுக்கு ரூ.22000/- மதிப்பில் மாற்றுதிறனாளி உதவித்தொகைக்கான காசோலையும், 3 பயனாளிகளுக்கு ரூ.50000/- மதிப்பில் நலிந்தோர் உதவித்தொகைக்கான காசோலையும், 202 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளும், 10 பயனாளிகளுக்கு பல்வேறு சான்றிதழ்களும், 89 பயனாளிகளுக்கு இணையவழி பட்டா மாறுதல் ஆணைகளும், 24 பயனாளிகளுக்கு நத்தம் பட்டா மாறுதல் ஆணைகளும், 156 பயனாளிகளுக்கு ரூ.387950/- மதிப்பில் கல்வி உதவித்தொகைக்கான காசோலையும், வேளாண்மைத்துறையின் சார்பில் 1 பயனாளிக்கு மானிய விலையில் ரூ.60000 மதிப்பில் பவர் டில்லர் கருவியும், 1 பயனாளிக்கு ரூ.35000 மதிப்பில் ரோட்டவேட்டர் கருவியும், 1 பயனாளிக்கு ரூ.15000/- மதிப்பில் குழாய்களும், 2 பயனாளிகளுக்கு தலா ரூ.600 மதிப்பில் கைத்தெளிப்பான்களும் 1 அம்மா பண்ணை மகளிர் குழுவிற்க்கு ரூ.300 மதிப்பில் தென்னங்கன்றுகளும், 2 பயனாளிகளுக்கு தலா ரூ .200 மதிப்பில் உளுந்து விதைகளும், 2 பயனாளிகளுக்கு தலா ரூ.87 மதிப்பில் நுண்சத்து இடுபொருளும், 5 பயனாளிகளுக்கு மண்வள அட்டைகளும் , தோட்டக்கலைதுறையின் சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு மானிய விலையில் ரூ.11250 மதிப்பில் முந்திரி ஒட்டுச் செடிகளும் ,1 பயனாளிக்கு ரூ.20000 மதிப்பில் மிளகு பதியன்களும் ,1 பயனாளிக்கு ரூ.18000 மதிப்பில் பப்பாளி கன்றுகளும் ,1 பயனாளிக்கு ரூ.8000 மதிப்பில் மிளகாய் குழித்தட்டு நாற்றுகளும் , புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் 12 சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.10.90 இலட்சம் மதிப்பில் நிதியுதவி தொகைக்கான காசோலைகளும், என மொத்தம் 795 பயனாளிகளுக்கு ரூ.7326774 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இம்முகாமில் சமூகநலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம், பள்ளிகல்வித்துறை, புதுவாழ்வுத்திட்டம், வேளாண்மைத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆகிய துறைகளின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், செயல்பாடுகள் மற்றும் தகுதிகள் குறித்து அலுவலர்கள் திட்ட விளக்கவுரையாற்றினார்கள்.

மேலும், புதுநகர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த சிறப்பு மருத்துவ முகாமில் 175 புறநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மாற்றுத்திறனாளிகளுக்கு நடமாடும் சிகிச்சை பிரிவு வாகனம் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் 1460 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், ஆண்மைநீக்கம், தடுப்பூசி, செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் பிற சிகிச்சைகள் வழங்கப்பட்டது.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுசுகாதாரத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சமூகநலத்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, புதுவாழ்வுத்திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம் மற்றும் கால்நடைபராமரிப்புத்துறை மூலம் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளில் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த கண்காட்சியை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இம்முகாமில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம், புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சந்தோஷ்குமார், வேளாண் இணை இயக்குநர் திரு.அண்ணாமலை,கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குநர் திரு.சதாசிவம், மாவட்ட வழங்கல் அலுவலர்திருமதி.பஞ்சவர்ணம், மாவட்டமுதன்மை கல்விஅலுவலர் திருமதி.சாந்தி, மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.ரேணுகா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சரவணக்குமார், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திருமதி.சூரியகலா, வட்டாட்சியர் திருமதி.இந்திராதேவி, ஆத்மாகுழுத்தலைவர்.ரெங்கராஜன் முன்னால் ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.பாண்டியன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**